## மே - 05 - வெள்ளி

### புனித ஆஞ்சலோ

### "ஆண்டவர் நமக்குக் காட்டும் மாறாத அன்பு மிகப்பெரியது" – திபா 117 – 2

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 9 : 1 – 20

அந்நாட்களில் சவுல் சீறியெழுந்து ஆண்டவரின் திருத் தூதர்களைக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்தி வந்தார். தலைமைக் குருவை அணுகி, இந்தப் புதிய நெறியைச் சார்ந்த ஆண், பெண் யாராய் இருந்தாலும் அவர்களைக் கைதுசெய்து எருசலேமுக்கு இழுத்துக்கொண்டு வரத் தமஸ்கு நகரிலுள்ள தொழுகைக் கூடங்களுக்குக் கடிதங்களைக் கேட்டு வாங்கினார். இவ்வாறு அவர் புறப்பட்டுச்சென்று தமஸ்குவை நெருங்கியபோது திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்து வீசியது. அவர் தரையில் விழ, "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?" என்று தம்மோடு பேசும் குரலொன்றைக் கேட்டார். அதற்கு அவர், "ஆண்டவரே நீர் யார்?" எனக்கேட்டார். ஆண்டவர், "நீ துன்புறுத்தும் இயேசு நானே. நீ எழுந்து நகருக்குள் செல் நீ என்ன செய்யவேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார். அவரோடு பயணம் செய்தோர் இக்குரலைக் கேட்டனர். ஆனால் ஒருவரையும் காணாமல் வாயடைத்து நின்றனர். சவுல் தரையிலிருந்து எழுந்தார். தம் கண்கள் திறந்திருந்தும் அவரால் எதையும் பார்க்க முடியவில்லை. எனவே அவர்கள் அவருடைய கைகளைப் பிடித்து அவரைத் தமஸ்குவுக்கு அழைத்துச் சென்றார்கள். அவர் மூன்று நாள் பார்வையற்றிருந்தார். அந்நாள்களில் அவர் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை. தமஸ்குவில் அனனியா என்னும் பெயருடைய சீடர் ஒருவர் இருந்தார். ஆண்டவர் அவருக்குத் தோன்றி, "அனனியா" என அழைக்க, அவர், "ஆண்டவரே, இதோ அடியேன்" என்றார். அப்போது ஆண்டவர் அவரிடம், "நீ எழுந்து நேர்த் தெரு என்னும் சந்துக்குப் போய் யூதாவின் வீட்டில் சவுல் என்னும் பெயருடைய தர்சு நகரத்தவரைத் தேடு. அவர் இப்போது இறைவனிடம் வேண்டிக் கொண்டிருக்கிறார். அனனியா என்னும் பெயருடைய ஒருவர் வந்து தாம் மீண்டும் பார்வையடையுமாறு தம்மீது கைகளை வைப்பதாக அவர் காட்சி கண்டுள்ளார்" என்று கூறினார். அதற்கு அனனியா மறுமொழியாக, "ஆண்டவரே, இம்மனிதன் எருசலேமிலுள்ள இறைமக்களுக்கு என்னென்ன தீமைகள் செய்தான் என்பதைப் பற்றிப் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். உம் பெயரை அறிக்கையிடும் அனைவரையும் கைது செய்வதற்காகத் தலைமைக் குருக்களிடமிருந்து அதிகாரம் பெற்று இங்கே வந்திருக்கிறான்" என்றார். அதற்கு ஆண்டவர் அவரிடம், "நீ செல். அவர் பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார். என் பெயரின்பொருட்டு அவர் எத்துணை துன்புறவேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக்காட்டுவேன்" என்றார். அனனியா அங்கிருந்து போய் அந்த வீட்டுக்குள் சென்று கைகளை அவர் மீது வைத்து, "சகோதரர் சவுலே, நீர் வந்த வழியில் உமக்குத் தோன்றிய ஆண்டவராகிய இயேசு நீர் மீண்டும் பார்வை அடையவும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படவும் என்னை உம்மிடம் அனுப்பியுள்ளார்" என்றார். உடனே அவருடைய கண்களிலிருந்து செதிள்கள் போன்றவை விழவே அவர் மீண்டும் பார்வையடைந்தார். பார்வையடைந்ததும் அவர் எழுந்து திருமுழுக்குப் பெற்றார். பின்பு சவுல் உணவு அருந்தி வலிமை பெற்றார். சில நாள்களாக சவுல் தமஸ்குவில் சீடர்களுடன் தங்கியிருந்தார். உடனடியாக அவர் இயேசுவே இறைமகன் என்று தொழுகைக் கூடங்களில் பறைசாற்றத் தொடங்கினார்.

**பதில்பாடல்:** உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

## நற்செய்தி : யோவான் 6 : 52 – 59

அக்காலத்தில் நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எப்படிக் கொடுக்க இயலும்?" என்ற வாக்குவாதம் அவர்களிடையே எழுந்தது. இயேசு அவர்களிடம், "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள். எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன். வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர். உண்பவரை என்றும் வாழச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த இந்த உணவே. இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்து போனார்கள். இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர்." இயேசு கப்பர்நாகுமிலுள்ள தொழுகைக்கூடத்தில் இவ்வாறு கற்பித்தார்.

**தியானம்:** "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன்" என்ற இயேசுவின் வார்த்தைகளை நமது தற்கால நாகரீகப் பிண்ணனியிலிருந்து பார்க்காமல், அவர் வாழ்ந்த வரலாற்றுப் பிண்ணனியில் அணுகுகிறபோது, நிச்சயமாக நம்மால் அதனுடைய உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். இயேசுவின் சதையை நாம் உண்ண வேண்டும், அவர் நம்மில் கலக்க வேண்டும் என்பது எதனைக் குறிக்கின்றதென நாம் என்றாவது சிந்தித்ததுண்டா? இயேசுவை ஒரு விவாதப் பொருளாகவோ, அவரது இறப்பை வெறும் நிகழ்வாகவோ பார்த்தால் நம்மில் எந்தவொரு மாற்றத்தையும் அது ஏற்படுத்தாது. மாறாக, அவர் நம்மில் ஒருவராக மாறி, நமது வாழ்வாக்கப்பட வேண்டும். அவரது வாழ்வில் கடைப்பிடித்த விழுமியங்கள், நமது விழுமியங்களாக மாற்றப்படவேண்டும். இயேசு ஓர் இறையனுபவம். நமது உடல், உள்ளம் மற்றும் ஆன்மா அனைத்திலும், இயேசுவின் பெயர் ஒலிக்கப்படவேண்டும். நாம் இன்று அறிவியலில் முன்னேறி, பயண நேரம் குறைந்து, எமது பாதுகாப்பு அதிகரித்திருக்கிறது. மருத்துவம் அசுர வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆனாலும், நாம் ஏட்டளவில் மட்டுமே இயேசுவைப்பற்றி அறிந்திருக்கிறோமே தவிர அனுபவ அளவில் இயேசுவைப்பற்றிய குறைந்த அனுபவம் பெற்றவர்களாக இருக்கிறோம் என்பதனை மறுப்போமா? இயேசுவின் சதை என்பது அவரது மனிதத்தன்மையை பறைசாற்றுவதாக இருக்கிறது. கிறிஸ்து இயேசுவின் பரிசுத்த திரு உடலின் புனிதத்தன்மையை நாம் உணரவேண்டும். அதன் புனிதத்தன்மையை போற்றிப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு செய்வோமா? எனவே, அவ்விதமான செயற்பாட்டில் நாம் நிலைத்திருக்க அன்னை மரியாவின் வணக்க மாதமான இந்த மாதத்தில் உறுதி எடுப்போம்.